## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.114/2020

நாள்: 30.06.2026

வா.சா. 2 – கலைதாசன்

2026–ம் ஆண்டு ஜுன் 30–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க 1ம் வாதி லோகநாதன் அழைத்து வந்தார். காமராஜ் என்னுடைய தந்தை என்றால் சரிதான். அவர் ஆவண எழுத்தராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். என் தந்தை ஆவண எழுத்தராக இருந்தபோது நான் தட்டச்சுராக இருந்தேனா என்றால் இல்லை. நான் தற்போது தட்டச்சராக உள்ள அலுவலகத்தில் தான் என்னுடைய தந்தை ஏற்கனவே ஆவண எழுத்தராக இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் எழுதிக்கொடுக்கும் ஆவணத்தை நான் தட்டச்சு செய்து கொடுப்பேன். ஆவணத்தில் உள்ள நபர் எவ்வளவு பணம் பேசிக்கொள்வார்கள், பணம் வாங்குவார்கள், கொடுப்பார்கள் என்பதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை தட்டச்சு செய்ய யார் கொடுத்தார் என்றால் வீராசாமி என்ற வழக்கறிஞர் கொடுத்தார். அந்த ஆவணத்தில் உள்ள தரப்பினர்கள் அப்போது வந்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் தட்டச்சு செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3–ல் தட்டச்சு செய்தவருடைய கையொப்பம் யாருடையது என்றால் அசல் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். கலை கம்யூட்டர் நிறுவனத்தில் எத்தனை நபர்கள் பணிபுரிகிறோம் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. என்னை தவிர மற்ற நபர்கள்

பணிபுரிகிறார்கள். அவ்வப்போது வருவார்கள், பணிபுரிந்துவிட்டு சென்று விடுவார்கள். கலை கம்யூட்டர்ஸ் நிறுவனத்தில் யார் தட்டச்சு செய்கிறார்களோ அவர்கள் தான் அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்வார்கள். எங்களுடைய அலுவலகத்தில் தட்டச்சு செய்யும்போது ஆவணத்தில் உள்ள நபர்கள் எங்களது அலுவலகத்தில் வைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்வார்களா என்றால் ஒரு சிலர் கையொப்பம் செய்வார்கள். வா.சா.ஆ.3 ஆவணத்தை தட்டச்சு செய்தபோது இந்த ஆவணத்தில் எங்களது அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தார்களா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து எங்களது அலுவகத்தில் வைத்து தரப்பினர்கள் கையொப்பம் செய்ததாக 1ம் வாதி சொன்னதன் பெயரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.